(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்–தொடர்ச்சி

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி, ஒசூர் தேசிய நெடுஞ்சாலையில் கடந்த இரண்டு மாதங்களில், சுமார் 40 நபர்கள் விபத்தில் பலியாகியிருக்கிறார்கள். அந்த 40 நபர்கள் விபத்தில் பலியானதற்கு மாண்புமிகு அமைச்சர், . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், நீங்கள் அதற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறோம், உட்காருங்கள். (குறுக்கீடு) பதிவு செய்யப்பட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பெரியண்ணன் அரசு, சொல்லுங்கள்.*

திரு. பெரியண்ணன் அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகரத்தில் காவேரி குடிதண்ணீர் ஒரு பகுதியில் வருகின்றது. ஒரு பகுதியில் ஒரு குடம் தண்ணீர் ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது.*

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு, நேற்றுதான் நீங்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு)*

(ஆ) தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் உட்பட விவசாயிகள் வாங்கிய அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்யக் கோருதல்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்துவிட்டீர்கள். அவ்வளவுதான், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசுவார்.*